**கட்டுநாயக்க சீதுவை நகர சபை - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கட்டுநாயக்க சீதுவை நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள கட்டுநாயக்க சீதுவை நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் விரிவான முகாமைத்துவ அறிக்கையில் பின்வரும் இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.1,1.2.2.(அ),(ஆ),1.2.3,1.2.4.(அ),(ஆ),1.2.5.(அ),(ஆ),2.2.2,2.2.3.(அ),(ஆ)மற்றும

3.4.1

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவின மானிய பெறுவனவுகளில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், மிகைகள் இனங்காணப்பட்ட மானியமாக குறைத்து சேமிப்பு தேறிய சொத்துக்கள்/ உரிமை | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனத்தின் கீழான மிகையில் இனங்காணப்படாத மானியத்தின் கீழ் குறிப்பிடப்படல் வேண்டும். மீளாய்வாண்டில் கிடைத்த நிதியேற்பாடுகளில் ரூபா 3,699,215 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறவேண்டியதாக குறிப்பிடப்பட்ட ரூபா 23,326,897 நிதியேற்பாட்டு தொகை குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மிகையில் இனங்காணப்படாத மானியத்தின் கீழ் சேமிப்பாக எந்தவொரு தொகையும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | இலக்கம் 18.3 இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் (SLFRS) பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஆரம்ப நிதிக் கூற்று என்பதற்கான விளக்கமளித்தல்கள் மற்றும் வரையறுக்கப்படாத வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தின் போது சரியாக சமர்ப்பிக்கப்படுமென அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலக்கம் 18.7 மற்றும் LGD/10A/4/ந.கி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் சபைக்குரிய சகல நிலையான சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், நிலவரைபடம் உள்ள காணி மற்றும் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மாத்திரம் தற்காலிகமாக மதிப்பீடு செய்யப்பட்டு | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சகல சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்து சமர்ப்பிக்கப்படுமென அறியத் தருகின்றோம். | - மேற்படி - |

கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. சபைக்குச் சொந்தமான ஏனைய நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்களுக்குள் நுழைவதற்கு முன்னரான பெறுமதியின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.6.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கையின் இலக்கம் 3.2 இன் கீழ் கணனி 15 சதவீதம், கணனி துணைப்பாகங்கள் 12.5 சதவீதம், இயந்திரம் 05 சதவீதம் மற்றும் தளபாடங்களும் பொருத்திகளும் 05 சதவீதம் என பெறுமானத்தேய்வு செய்ய வேண்டியதாக காண்பிக்கப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 3,653,277 தொகையான கணனிகள், நிலையான சொத்துக்கள் பட்டோலையில் இயந்திரத்தின் கீழும், ரூபா 351,724 பெறுமதியான வலையமைப்பு முறைமை, தளபாடங்களும் பொருத்திகளின் கீழும் வகைப்படுத்தப்பட்டு அந்த சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு வீதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்காக சகல மிகுதி நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது சகல வகைப்படுத்தல் வழுக்களையும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | கணக்கீட்டு கொள்கையின் சரியான பெறுமானத்தேய்வு வீதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) எவரிவத்த நாள் சந்தையின் வாடகையாளர்களினால் சபைக்குச் செலுத்தப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை மின்சார பட்டியலின் பெறுமதி ரூபா 183,344 | எதிர்காலத்தில் இவ்வாறான வருமானம் கிடைக்கும் போது திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் மீளாய்வாண்டிற்குரிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | சீதுவை சந்தை கட்டிடத் தொகுதியில் 04 கடைகளுக்காக மேலும் நிலுவையாக இருந்த ரூபா 1,217,857 ஆரம்ப முற்பண தொகை பெறவேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | சகல நிலுவைப் பணமும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக அரசாங்கத்திலிருந்தான கையளித்தலின் மொத்தப் பெறுமதி ரூபா 29,648,006 ஆக இருந்த போதிலும் சபையினால் விரிவான வருமானக் கூற்றில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த மொத்த நிதியுதவிகளின் பெறுமதி ரூபா 23,366,897 ஆனமையால் 08 செயற்திட்டங்களுக்கான ரூபா 6,301,109 தொகை குறைத்து குறிப்பிடப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது அரசாங்கத்திலிருந்து வருகின்ற கையளித்தல்களின் மொத்தப் பெறுமதியை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | மொத்த நிதி உதவிகளின் பெறுமதியும் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவும் மற்றும் வழிகாட்டல்களின் கீழான EG 3.1 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோர் மற்றும் பெறவேண்டிய சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாத 05 செயற்திட்டங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 24,884,956 மற்றும் முன்னைய ஆண்டில் மூலதன செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்படாத 07 நிர்மாணங்களுக்கான ரூபா 5,140,190 தொகையான பெறுமதி நடைமுறை | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 31 டேலர்கள் மற்றும் டிரக்டர் வண்டிகளின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் இயந்திரங்களை மீள்மதிப்பீடு செய்து பெறுமதியிட்டு கணக்கீடு செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சபைக்குச் சொந்தமான சகல சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 9.9 இன் பிரகாரம் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்ட அடிப்படைப் பெறுமதி விரிவான வருமானக் கூற்றில் நாட்குறிப்பு பதிவின் மூலம் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் வருமானமாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறின்றி பெறவேண்டியதாக குறிப்பிடப்பட்ட ரூபா 23,366,897 நிதியேற்பாட்டு தொகையும் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அப் பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உள்ளுராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற ரூபா 16,198,241 தொகையான கணக்கு விடயத்திற்குரிய மீதிக்கும் உபயோக பதிவேடுகளில் காணப்படுகின்ற மீதிக்குமிடையே ரூபா 1,000,869 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பட்டோலைகளுடன் தயவுடன் சமர்ப்பிக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 199,670,282 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 149,282,566 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலுவையாகவிருந்த ஆதனவரி மற்றும் வாடகை மீதி மீளாய்வாண்டின் இறுதியின் போது முறையே ரூபா 40,772,000 மற்றும் ரூபா 3,689,000 வரை அதிகரித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையில் அறவிடப்பட்டிருந்த தொகை முறையே 27,887,773 மற்றும் ரூபா 159,779 ஆகும். | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அதிகார பிரதேசங்கள் மூடப்பட்டமை இந்த நிலுவை ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது என அறியத்தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சீதுவை புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியில் பழைய விற்பனைக் கடை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 12 கடைகளிலிருந்து 02 வருடங்களுக்காக மாத்திரம் 2000 திசெம்பர் 09 ஆந் திகதிய மதிப்பீட்டில் 50 சதவீத தொகையை அறவிடுவதற்கு சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு முதல் 2018 ஆகஸ்ட் வரை 8½ வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று அதன் பிரகாரம் | சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் 50 சதவீதத்தை அறவிடுவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என அறியத்தருகின்றோம். | வாடகை வருமானத்தை திருத்துவதற்காக விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருந்தது. இந்த கடைகளுக்காக 2017 யூன் மாதத்தில் மீண்டும் மதிப்பீடொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த மதிப்பீட்டையும் அமுல்படுத்தாமல் 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய சபை தீர்மானத்தின் அடிப்படையில் 2018 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் அந்த கடைகளின் வாடகை (திருத்தப்பட்டு) குறைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கட்டுநாயக்க புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியில் இலக்கம் 06, 07, 08, 09 மற்றும் 10 என்ற கடைகளுக்கு உரித்தான வாடகையாளர்களினால் 2010 - 2017 காலப்பகுதியில் வாடகைப் பணம் தாமதமாக செலுத்தியதன் காரணமாக சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை தண்டப்பணம் ரூபா 1,677,409 தொகை 2021 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக இரு தரப்பினரால் கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கையின் செல்லுபடிக்காலம் 2015 மார்ச் 17 ஆந் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | உரிய நிலுவைப் பணம் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உரிய உடன்படிக்கை தற்போது கையொப்பத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சீதுவை அமுன வீதி பல்நோக்கு கட்டிடத்தில் அமைந்துள்ள தபால் அலுவலகத்திற்கு வாடகைக்காக வழங்கப்பட்ட கடைக்காக 2015 யூலை 01 ஆந் திகதி முதல் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரை மாதாந்த வாடகை ரூபா 7,500 வீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 | புதிய மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்வதற்காக தற்போது மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | புதிய மதிப்பீடொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நவம்பர் 01 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட விலைமதிப்பீட்டின் பிரகாரம் வாடகைப் பணம் தீர்மானிக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 ஏப்ரல் முதல் 2013 ஏப்ரல் வரையான மாதத்திற்காக சபையின் 24 ஊழியர்களின் ஊழிய சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு பணம் செலுத்தாமையின் காரணமாக ஊழியர் சேமலாப நிதியத்தினால் ரூபா 1,086,228 மிகைக் கட்டணமொன்று விதிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகை 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்பார்க்காத காரணங்களினால் மற்றும் இந்த தண்டப்பணம் மிகை கட்டணமாக கருதுதல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் பெயர்களை வெயிடுதல் வசதியீனமான விடயமாக இருந்தது என அறியத்தருகின்றோம். | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் இடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்குச் சொந்தமான சீதுவை விலேஜ் பொதுக் காணியில் வெளிநபருக்கு வியாபார நடவடிக்கைகளுக்காக தற்காலிக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு 2017 ஆம் ஆண்டின் போது இடவசதிகளை வழங்கி பின்னர் அதனை நிறுத்துவதற்கு | உரிய வழக்கிற்காக சட்டத்தரணியை நியமித்தல் மற்றும் கட்டணம் தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திடாதிருந்ததுடன் அவ்வவ்போது அவரினால் வழங்கப்பட்டு பெறப்பட்ட கோரிக்கைகளுக்கு உரிய பணம் செலுத்தப்பட்டது என அறியத்தருகின்றோம். | சட்டத்தரணியுடன் சபை உடன்படிக்கையில் கைச்சாத்திடு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் சட்டத்தரணி கட்டணம் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கிய |

கட்டளையிட்டதன் காரணமாக உரிய வெளித்தரப்பினரால் தங்களால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மற்றும் தங்களுக்கு ஏற்பட்ட நட்டத்தின் மொத்தப் பெறுமதியான ரூபா 15,000,000 தொகையை அறவிட்டுத் தருமாறு கோரி நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சபைக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 17 ஆந் திகதி வரையில் 09 வழக்கு தடவைகள் கோரப்பட்டிருந்ததுடன் வழக்குகளில் சமூகமளிப்பதற்காக சபையினால் சட்டத்தரணிக்கு செலுத்தப்பட்ட ரூபா 490,000 தொகையான சட்டத்தரணி கட்டணத்தை பொறுப்பின்றி வெளிநபருக்கு சபைக்குச் சொந்தமான காணியில் வியாபார நடவடிக்கைகளுக்காக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய வழக்கிற்காக சமூகமளித்த சட்டத்தரணியுடன் சபை உடன்படிக்கையில் கைச்சாத்திடாதிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் ஒரு வழக்கு தடவையின் போது செலுத்த வேண்டிய சட்டத்தரணி கட்டணம் ரூபா 35,000 ஆக இணங்கியிருந்த போதிலும், அந்த தொகையினை விஞ்சி பல்வேறு பெறுமதிகளில் சட்டத்தரணி கட்டணம் செலுத்தப்பட்டமையின் காரணமாக 09 வழக்குத் தடவைகளின் போது ரூபா 175,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்கு சொந்தமான அரலிய லேன்ட்ஸ் பொதுக் காணிக்கு அடுத்தாலுள்ள காணியில் ஹோட்டல் வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போது 29 அடி அகலமான நுழைவு வீதியொன்று தேவையாக இருந்ததாக வெளியிட்டு சபைக்குச் சொந்தமான பொதுக் காணியில் 05 பேர்ச் நில அளவொன்று பெறப்பட்டு அதற்காக அவருக்குச் சொந்தமான காணியில் 6.5 பேர்ச் சபைக்கு வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. உரித்தான வியாபாரத்திற்கு ஏனைய வேறொரு யூ.சீ வீதி ஏற்படுத்தப்பட்டமையால் அரசாங்கத்திற்கு சொந்தமான பாதுகாப்புப் பகுதியில் நுழைவு வீதிக்காக வழங்கும் இயலுமை, மாற்றல் காணிகளின் தீர்த்தல் உரித்து, அரசாங்கத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றல் காணியின் பெறுமதி மற்றும் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணியைப் பயன்படுத்துதல் தொடர்பாக ஏலக் காணி உரிமையாளர்களின் அங்கீகாரம் போன்ற சட்டரீதியான நிலைமைகள் மற்றும் அபிவிருத்தி செய்யும் போது வாய்க்கால் ஒதுக்க பகுதிகளுக்கு உரித்தற்ற அந்த பிரதேசத்திற்கு ஏற்படுகின்ற சுற்றாடல் பாதிப்பு என்பவற்றை கவனத்தில் கொள்ளாமல் சபைக்குச் சொந்தமான பொதுக் காணியின் பகுதியொன்றை தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 2020 யூன் 29 ஆந் திகதிய சபைக் கூட்டத்தில் சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. | இந்த மாற்றல்களுக்குரிய விடயங்களை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தமையால் எதிர்காலத்தில் இது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அறியத் தருகின்றோம். | ஒதுக்கப் பிரதேசங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சுற்றாடல் பாதிப்பை குறைத்தல் மற்றும் சபைக்குச் சொந்தமான பொது ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையினால் முத்திரைக் கட்டணத்தை கையேற்பதற்காக வருமான ஆணையாளருக்கு சமர்ப்பித்து 2017 - 2018 வருட காலத்தில் நீர்கொழும்பு மற்றும் கம்பஹா காணி பதிவாளர் அலுவலகத்திற்குரிய முத்திரைக் கட்டணம் ரூபா 11,539,400 தொகை பட்டியல்களில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளின் காரணமாக சபைக்கு மீள கையளிக்க முடியாதிருந்ததாக மேல் மாகாண இறைவரி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இறைவரி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் உரிய சரிசெய்தல்களை மேற்கொண்டு அந்த முத்திரைக் கட்டணத்தை கையேற்பதற்காக 2021 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு நுழைவதற்கு கொவிட் 19 ஆபத்தான நிலைமையின் அடிப்படையில் இடமளிக்கப்படாமையின் காரணமாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | உரிய சரிசெய்தல்களை மேற்கொண்டு முத்திரைக் கட்டண பணத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 20 வருடங்கள் அளவிலான காலம் முதல் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குரிய அம்பலமுல்ல பிலப்பிட்டிய என்ற பெயருடைய வயற் காணி பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக மண்ணிட்டு D5D இயந்திரம் மூலம் கழிவுப் பொருட்களை சிறு துண்டுகளுக்காக்குவதற்காக வருடாந்தம் ரூபா 60 இலட்சம் அளவிலான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இந்த காணி அரசாங்கத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் விற்பனை செய்வதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் போது எழுத்து மூல விருப்பம் தெரிவித்திருக்கும் போதும் | தற்போது இந்த காணி சபையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | சபைக்கு விரைவாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் அதற்காக அரசாங்கத்தின் மூலமும் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் சபையின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தின் அடிப்படையிலும் முகாமைத்துவத்தின் கவனமின்மையின் அடிப்படையிலும் இந்த காணியின் உரித்தை சபைக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு 20 வருடங்கள் வரையிலும் முடியாதிருந்தது. விடயங்கள் இவ்வாறு காணப்படும் போது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் இந்த காணி கையளித்த நபரிடமிருந்து நபரின் பிள்ளை ஒருவருக்கு கையளிப்பதற்கு 2020 சனவரி 27 ஆந் திகதி நடவடிக்கை எடுத்தமையினால் சபையின் கழிவுப் பொருட்களை அகற்றுதல் தொடர்பாக பிரச்சினையான நிலைமையொன்று எழுந்திருந்தது. | | |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான அம்பந்தொழுவ ஹொரகரகஹஹகும்புற பெயருடைய பொதுக் காணியின் லொட் இலக்கம் 15/ஏ என்ற 40 பேர்ச் நிலப்பகுதியில் அனுமதிற்ற ஒருவர் குடியிருந்து வருகின்றமை களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் 1979 இன் 07 ஆம் இலக்க உரித்தை மீளப்பெறும் சட்டத்தின் கீழ் 07 நாட்களுக்குள் அதன் உரித்தை சபைக்கு மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி கம்பஹா மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அதனை சபைக்குச் சொந்தமாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1979 இன் 07 ஆம் இலக்க உரித்தை மீளப்பெறும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | உரித்தை மீளப் பெற்றுக் கொள்ளும் சட்டத்தின் கீழ் சபைக்கு சொந்தமாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |